உ

சிவமயம்

# திருமதி. இராஜேஸ்வரி கமலநாதன் (பவா)

## அவர்களின்

# நினைவு மலர்



துன்னாலை வடக்கு

கரவெட்டி

15.12.2017

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitiz
noola

உ
சிவமயம்

# அமரர்

# திருமதி.இராஜேஸ்வரி கமலநாதன் (பவா)



பிறப்பு
20
.
06
.
1952

இறப்பு
15
.
11
.
2017

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு ஏவிளம்பி மீ ஐப்பசி 29 புதன்
அபரபக்க திரயோதசி திதியில்
நித்தியம் வாழ்ந்த இராஜேஸ்வரி
நிறைவுடன் நிமலனடி சேர்ந்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# யாழ்ப்பாணம் வடமராட்சி
# வடதுன்னையம்பதி வாசரும்

அமரர் சின்னப்பா வேலும்மயிலும் இலட்சுமியம்மா அவர்களின்
புத்திரியும்
திரு.செல்வநாயகம் கமலநாதன் அவர்களின்
அன்பு மனைவியும் ஆகிய

## அமரர் திருமதி.இராஜேஸ்வரி அவர்களின்

மறைவு குறித்த

# நினைவு மலர்

**15.12.2017**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாக்கள்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

கபிலதேவநாயனார்

## தேவாரம்

விண்ணாகி நிலனாகி விசும்புமாகி
வேலைசூழ் ஞாலத்தார் விரும்பு கின்ற
எண்ணாகி எழுத்தாகி இயல்புமாகி
ஏழுலகுந் தொழுதேத்திக் காணநின்ற
கண்ணாகி மணியாகிக் காட்சி யாகிக்
காதலித்தங் கடியார்கள் பரவ நின்ற
பண்ணாகி இன்னமுதாம் பாசூர் மேய
பரஞ்சுடரை கண்டடியேன் உய்ந்தவாறே.

திருநாவுக்கரசர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னார் மேனியனே புலித்
தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடை மேல் மிளிர்
கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழ
பாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி
யாரை நினைக்கேனே.

சுந்தரர் – நட்டராகம்

## திருவாசகம்

பூசுவதும் வெண்ணீறு
பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால்
மறைபோலும் காணேடீ
பூசுவதும் பேசுவதும்
பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும்
இயல்பானான் சாழலோ.

மாணிக்கவாசகர்

## திருவிசைப்பா

கூத்தனை வானவர்தங் கொழுந்
தைக் கொழுந் தாய் எழுந்த
மூத்தனை மூவுருவின் முத
லைமுத லாகி நின்ற
ஆத்தனைத் தான்படுக்கும் அந்
தணர்தில்லை யம்பலத்துள்
ஏத்தநின் றாடுகின்ற எம்
பிரான் அடி சேர்வன்கொலோ.

திருவாலியமுதனார் – இந்தளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

சேந்தனார் – பஞ்சமம்

## திருமந்திரம்

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

திருமூலநாயனார்

## பெரியபுராணம்

வேதநெறி தழைத்தோங்க
மிகுசைவ துறைவிளங்கப்
பூதபரம்பரை பொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித்
திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
திருத்தொண்டு பரவுமாம்.

சேக்கிழார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர் நேசா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநி பாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

அருணகிரிநாதர்

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி கமலநாதன் இராஜேஸ்வரியின் (பவா) வாழ்க்கைப் பதிவுகள்

கார் வளம் கண்டு நீர் வளம் கொண்டு
நெடு நிலத்தரிய நெல் விளையும் துன்னையூர்
பேர் வளம் தரும் பனை தென்னை வேம்பு புளி வாகை
ஆல் அரசு மருதுவென பசும் சோலையாய் காட்சி தரும் பேரூர்
சீர் வளம் கொள் மா பலா வாழை மாதுளை பப்பாசி கத்தரி
தக்காளி வெண்டியென கனிகளும் காய்களும் தரும் சிறந்தவூர் – இவ்வூர்
ஏர் வளமும் ஏற்ற உபகரணமும் ஆள் பலமும் கொண்டு குளம் வெட்டி
வளம் பெருக்கி மேழியர் வாழ் மேதினிற் சிறந்த துன்னையூர்
பேர் அருள் தரும் வல்லியானந்தப் பிள்ளையார் வல்லிபுர ஆழ்வார்
திருவருள் துணைகொண்டு திருவும் அருளும் பெற்று
ஊர் மேம்பட வாழ்ந்த வேலும்மயிலும் இலட்சுமிஅம்மா தம்பதியர்
இல்லற வாழ்வில் இனிது இரட்டையராய்
நார் (அன்பு) கொள் நடுப்புத்திரியாய் மூத்த மைந்தனாய்
வந்துதித்தனர் இராஜேஸ்வரி, இராஜேஸ்வரன் 1952 யூன் திங்கள் இருபதில்
ஆர் (நிறைவான) இரட்டையரில் இரண்டு மாதத்தில் இராஜேஸ்வரன் மறைந்திடவும்
இராஜேஸ்வரி தொடர்ந்நிட்டடார் தன் வாழ்வை ஆறரைத் தசாப்தமாக.

தந்தையார் சிறுகைத் தொழில் திணைக்களத்தில் சிறப்புடன் சேவையாற்ற
தாயாரும் மூத்த தாய்மாமனும் தம்தந்தையர் ஆரம்பித்த பள்ளியில்
–ஆசிரியராய் பணிபுரிய
அம்மம்மா அக்கா தங்கையை பாதுகாத்துப் போசிக்க
அம்மா மூத்தமாமா அக்கா இராசலட்சுமி சகிதம் அரிவரியில்
அடியெடுத்து வைத்தார் துன்னாலை கந்தோர் பள்ளியில்
அடுத்து தம்பி காசிதாசனும் தங்கை ஜெயலட்சுமியும் சிவசுப்பிரமணியமும்
–(ஆனந்தன்)
ஆரம்ப கல்வியை அக்காமார் வழியில் தொடர்ந்தனர் காசிநாதர்
–வித்தியாலயத்தில்
ஆறாம் வகுப்பிலிருந்து தன் கல்வியைத் தொடர்ந்தார் வட இந்து மகளிர்
–கல்லூரியில் இராஜேஸ்வரி
இடைநிலைக் கல்வி முடித்து இல்லத்தில் இன்புற்று வாழ்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையாயிருந்த பாட்டியும் பின் துணையாயிருந்த மூத்த மாமா சோமு
–வாத்தியாரும்
இறையோன் அடி சேர்ந்திடவே இஞ்சை கொண்டனர் இல்லத்தினர்
இரண்டாண்டு ஓட துக்கக் கனதி குறைய அக்கா திருமணத்தை அடுத்து
–மும்மொழி தேர்ச்சி பெற்ற
இரத்த உறவினர் இ.போ.சபை இரத்மலானை சாலையில் சாலைப்பரிசோதகர்
–கமலநாதனை
இருமனம் இணைய கரம்பற்றினார் இராஜேஸ்வரி 1983ல்
இருவரும் கொழும்பில் பாலும் தேனுமென பாங்காய் வாழ்ந்தனர் – ஊர் வந்த
இருவரின் இல்வாழ்வில் இம்பர் போற்ற கிரிஷாந்தி 1986ல்
இசைபட வாழ கிரிதரனும் 1987ல் வந்துதிக்க
இதம் தர வளம் பெற்று வாழ்ந்தனர் இலக்குமி அருளால்
தம்பி காசிதாசன் விஞ்ஞான பட்டதாரியாகி சவூதி சென்று தொழில்புரிய
தம்பி ஆனந்தனும் தங்கை ஜெயலட்சுமியும் லண்டன் சென்று வாழ்ந்துவர
தம்பியர் தங்கை திருமணமும் சிறப்புடன் நடந்தேற
தம்பியர் தங்கை தம் குடும்பமாய் பிள்ளைகளுடன்
தவறாது இயல்பு நிலைக்கேற்ப இரண்டாண்டுக் கொருதரம் வந்து செல்ல
தன் உறவினர் கோபி திருமணத்துக்கு மகள் மகன் தம்பி ஆனந்தனுடன்
–இந்தியா சென்றிட்டார்
தென்பாரதத்திலும் இலங்கையிலும் பலதலங்கள் சென்று தரிசிக்கும் பேறும்
–பெற்றிட்டார்
தன் கண்அவர் கமலநாதன் ஐந்து ஆண்டு சம்பளமற்ற விடுப்பில் UK சென்று
–திரும்பிவர
தாய் தந்தையருடன் சேர்ந்திருக்க – சிலகாலம் நீர்வேலியில் வாழ்ந்துவர
தான் பாலூட்டி சீராட்டி சோறூட்டி வளர்த்த தம்பிள்ளைகள் படிப்பில் சிறந்து
–விளங்க
தகமையுடன் சேவைபுரிந்த தன் கணவன் இ.போ.ச சாலையில் சாலை
–முகாமையாளராக பதவி வகிக்க
தண்ணளி பெற்று ஆனந்தமாய் வாழ்ந்து வந்தார் இராஜேஸ்வரி
2000ம் ஆண்டில் தன் தந்தையை இழந்து தவித்திட்டார்
2004ம் ஆண்டில் தாயையும் இழந்து இடிந்திட்டார்
மூத்தமகள் பல்கலைக்கழகம் புகுந்து சிறப்புப் பட்டதாரியாக வெளிவரவும்
கமலநாதன் இ.போ.சபையில் வடபிராந்திய செயலாற்று முகாமையாளராக
–பதவி உயர்வு பெற்றிடவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளின் வேலைத் தளம் மாற கொழும்பில் வாழ்ந்திடவும்
மகன் கிரிதரன் லண்டன் பல்கலைக்கழகத்தின் வியாபார நிதியியல் (சிறப்பு)
–பட்டதாரியாக வெளிவரவும்
படிப்படியாக பரவசமுற்று வாழ்ந்து வந்தார் – என்றும்
அயலவர் உறவினர் விருந்தினர் வருகையின் போது
அறுசுவை உணவு வழங்குவதில் ஆர்வமுடன் இருந்து ஆனந்தமுற்றார்
மகள் கிரிஷாந்தி விரிவுரையாளர் விக்னேஸ்வரனை விவாகம் செய்திட்டார்
மனையறம் காத்து வாழ்கையில் வேணுஷனும் பிறந்திட்டார்
மகன் கிரிதரன் UK யில் வதிவிடம் பெற்று ACCA படித்து
மாநகர் லண்டனில் மாண்புடைய கம்பனியில் கணக்காளராக கடமை
–ஏற்றிட்டார்
மகளும் யாழ்மாவட்ட செயலக நிர்வாகப்பிரிவில் சமூக சேவைகள் அமைச்சின்
–யாழ்மாவட்ட ஒருங்கிணைப்பாளராக கடமையாற்றிடவும்
மகளின் வாழ்விடமான பெருநகர் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கண்டு
மகள் மகன் (பேரன்) மேல் பேரன்பு கொண்டு பேரனை பேணுவதில்
–பெருமகிழ்வு கண்டிட்டார்
களிப்புடன் பேரன் மேல் பேரன்பு கொண்டு வாழ்கையில் முதுகு நோ
–கண்டிட்டார்
முதுகு நோவுக்கு சிகிச்சை ஓரிரண்டு மாதம் பெற்று கைதடி சென்று ஓரளவு
–சுகமும் பெற்றிட்டார்
மீண்டும் முதுகு நோ கூட உணவில் நாட்டம் குறைய வைத்திய நிபுணர்
–சிவன்சுதனை நாடிட்டார்
வைத்திய நிபுணரும் நுரையீரலிலிருந்து ஈரலில் பரவிய புற்றுநோய் கண்டு
–கலங்கிட்டார்
இதனை அறிந்து மகன் மனம் கலங்கி லண்டனிலிருந்து நாள்தோறும் கதைக்க
தம்பியர் தங்கை அவர்தம் சுற்றம் நேரில் வந்து தங்கியிருக்க
பேரனை பேணி வளர்க்க விரைவில் குணமாவேன் என்ற நம்பிக்கையுடன்
சிற்றுண்டியும் குடிபானங்களும் சிறிதளவில் அருந்தி விரைவில்
குணமாக ஆர்வமுடன் முயன்றிட்டார் இராஜேஸ்வரி
நோ தடுப்பு மருந்துகள் நோயின் தாக்கத்தை இயன்றளவு குறைக்க
அன்புக் கணவர் மகள் மருமகன் அக்கா அருகிலிருக்க
2017ம் ஆண்டு ஐப்பசிமாதம் 29ம் தேதி புதன் கிழமை அபரபக்க
திரயோதசி திதியில் பேச்சை மறந்து மூச்சை இழந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனடி சேர்ந்தார் இல்லத்தரசி இராஜேஸ்வரி (15.11.2017 – பி.ப 11.55) ஊரவர் உற்றவர் உறவினர் சூழ்ந்திருக்க பெண்கள் அழுதுபுலம்ப பல்கலைக்கழக மாவட்டச் செயலக பண்பாளர் பலரும் வந்து அஞ்சலி செலுத்த தியான் காட்டில் தீயுடன் சங்கமமானார் 16.11.2017ல்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

வாழ்க்கை ஒரு கேள்வி யாரும் விடைதரமுடியாது!
மரணம் ஒரு விடை யாரும் கேள்வி கேட்கமுடியாது!

கோடையிலே கொடுவேயிற் காயும் போதும்
கொழுந் தமிழ் பாமழையிற் தோயவேண்டும்
வாடையிலே வெற்றுடல் நடுங்கும் போதும்
வண்டமிழின் கதகதப்பிற் காயவேண்டும்
பாடையிலே படுத்தூரைச் சுற்றும் போதும்
பைந்தமிழில் அழுமோசை கேட்கவேண்டும்.

மட்டக்களப்பு புலவர்

அதிஷ்டக்காரனை நைல் நதியில் தலைகீழாகத் தள்ளினாலும் அவனுடைய வாயில் ஒரு மீனுடன் வெளிவருவான்.

அரேபியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அம்மம்மா...

அம்மம்மா எனக்கு அச்சு

சோக்சு தந்து என்ன

ஸ்ரோங்கா பார்த்தவ...

அம்மம்மா அப்புச்சாமிட்ட

போட்டா தம்பிட்ட வருவா...

அம்மம்மாவின் வெளைஞன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்து நடந்தால் இமய மலையும் நமக்கு வழி கொடுக்கும்
உறங்கிக் கிடந்தால் சிலந்தி வலையும் நம்மை சிறைபிடிக்கும்.

எல்லோருக்கும் பிடிச்ச மாதிரி
நான் இருக்கணும்ணு கடவுளிடம் கேட்டேன்
கடவுள் சிரிச்சுக்கிட்டே சொன்னார்
எனக்கே அந்தவரம் கிடைக்கலைன்னு.

நேராக இருக்கும் ஆணிதான் முதலில் அடிவாங்கும்.

பணத்தைப் பெற்றவர் அள்ளிக் கொடுக்க வேண்டும்
படிப்பைப் பெற்றவர் சொல்லிக் கொடுக்க வேண்டும்
பரிகாரத்தை படித்தவர் பரிவுடன் பார்க்க வேண்டும்

காயப்படுத்த பலர் இருந்தாலும்
மருந்தாக சிலர் இருப்பதாலேயே
நம் வாழ்க்கை அடுத்த கட்டத்தை நோக்கி பயணிக்கிறது.

நிசத்தைவிட நிழலுக்கு மதிப்புக் கூட
கூலிக்காரனுக்கு ரூபா ஆயிரம்
கூலிக்காரனாக நடிப்பவனுக்கு கோடி ரூபா.

வெற்றி வந்தால் பணிவு அவசியம்
தோல்வி வந்தால் பொறுமை அவசியம்
எதிர்ப்பு வந்தால் துணிவு அவசியம்
எது வந்தாலும் நம்பிக்கை அவசியம்.

உழைத்துக் கொண்டேயிரு அதில் சுகமிருக்கிறது
உழைப்பைக் கண்டால் துன்பங்கள் ஓடிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைத் தத்துவம்

வாழ்க்கையை நிர்ணயிப்பது உனது கடமையல்ல குழந்தாய்!
அதை நிர்ணயிப்பது உனக்கு மேலான சக்தி
அச் சக்தி திரும்பும் பாதையில் வாழ்வதுதான் உனது கடமை.

–பிரம்மஞானி

பணமும் பவிசும் திருமணமும் குழந்தைப் பேறும் தான் வாழ்க்கை எனில் மனிதனை விட நுளம்புகள் மேல்

– திலக்மகாராஜ சுவாமிகள்.

வாழ்க்கைப் பயணத்தின் சுமையை இலகுவாக்க நமது கரங்கள் உழைப்பில் வேகமாக இருக்கலாம். ஆனால் மனமோ எப்போதும் இறைசிந்தனையில் இருக்க வேண்டும். வருவதை ஏற்று நாம் வணங்கும் இறைவனின் நாமமும் உருவமும் நம் உள்ளத்தில் எப்போதும் இருக்க வேண்டும்.

"மனிதப் பிறவி மிகவும் அரிதானது"
கர்மவினைகளை அனுபவித்து முத்தியின்பம் பெறுவதற்கேயானது.

இறைநாம ஸ்மரணம் கலியுகத்தின் மிகச் சிறந்த ஆன்மீகச் செல்வம் மிகவும் சக்தி வாய்ந்தது. சகல பாவங்களையும் அழிக்கும். ஜட உலகத்துன்பங்களிலிருந்து ஒருவரை விடுவிக்கும்.

மனக்கவலையாலும் பயந்தாலும் நோயாலும் பீடிக்கப்பட்ட மனிதனுக்கு நம்பிக்கை ஒளிக்கீற்றாக வருவது இறைநாமமே. ஒருகையில் உடமையையும், மறுகையில் இறைவனையும் இறுக்கப் பிடிக்க வேண்டும். கடமை முடிந்ததும் இருகைகளும் இறைவனைப் பிடிக்க வேண்டும்.

"நாமம் சொல்லுவோம் நமனை வெல்லுவோம்" வீண் விவாதங்களிலும் தர்க்கங்களிலும் உரையாடல்களிலும் ஈடுபடுவதைக் குறைத்து இறைநாமத்தை உள்ளன்புடன் (ஓம் நமசிவாய, ஓம் நராயணா, ஓம்முருகா) உச்சரித்து உயர்ச்சி பெறுவோம்.

இறைவனடி சேர்ந்த எமது சகோதரியின் ஆன்மா சாந்தியடைய இறை நாமம் சொல்லுவோம் எமது மனமும் சாந்தியடையும்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

சாந்தாக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வில் வெற்றி பெற்றிட.....



வெற்றி இலக்கை நோக்கி வாழ்வை அமைதியாக நகர்த்திச் செல்வதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? தோல்விகள் எம்மை தொடராமல் இருக்க என்ன செய்யலாம்? வாழ்வில் எமது வெற்றி இன்னொருவரின் தோல்வியாக அமைந்து விடாமலிருக்க என்ன நடவடிக்கைகள் எடுக்க முடியும்? என்பது போன்ற தொடரான கேள்விகள் எம்முள்ளே எழுந்து கொண்டே இருக்கின்றன.

மனிதன் என்றால் யார்? என்று ஒரு இளம் மனிதனிடம் வினவியபொழுது 'காலையில் சேவல் போல எழுந்து மற்றவர்களையும் கூவி எழுப்பி காகம் போல குளித்துவிட்டு குரங்குபோல லபக் லபக் என்று உண்டு விட்டு பந்தயக் குதிரைபோல வேகமாக ஓடி வேலைக்குப் போய் மாடுமாதிரி உழைத்து வீடுவந்து குடும்பத்தவருடன் நாய் போலக் குரைத்து விட்டு அன்றாட விடயங்கள் தெரியாமல் ஆந்தைபோல முழித்து இரவு உணவை முதலைபோல உண்டுவிட்டு எருமை மாடு போலத்தூங்குபவன் தான் மனிதன்' என்று கருத்துப்பட வரைவிலக்கணப்படுத்த முயன்றான்.

இந்த வரைவிலக்கணம் விசித்திரமாக இருந்தாலும் எம்மில் பலருக்கு பொருந்தக் கூடியதாக இருக்கிறது. இது சம்பந்தமாக சிந்திக்கும் பொழுது சிந்திப்பதற்கும் ஓய்வுக்கும் நேரமின்றி மனநிறைவு, மன மகிழ்ச்சி என்பவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தில் எடுக்காது ஒரு இயந்திர வாழ்க்கை வட்டத்துக்குள் சிக்கி எந்தவித திட்டமிடலும் இன்றிவாழ்வு தானாக நகர்ந்து சென்றுகொண்டிருக்கிறதா என்று எண்ணத்தோன்றுகிறது.

இதனை நெறிப்படுத்திவழிப்படுத்துவது எவ்வாறு? மிருகங்களை ஒத்தவாழ்க்கை முறையிலிருந்து மனிதத்துவமான வாழ்க்கை முறைக்கு எம்மை நாம் எப்படி மாற்றிக் கொள்ள முடியும். இவற்றினூடே வெற்றி இலக்கைநோக்கி நாம் எவ்வாறு நகர முடியும்.

நாம் எவருக்கும் தாழ்ந்தவர்கள் அல்ல. அதே சமயம் நாம் மற்றவர்களிலும் பார்க்க உயர்ந்தவர்களும் அல்ல. அத்துடன் எம்மைப் போன்றும் வேறுயாரும் இல்லை. எனவேநாம் ஒவ்வொருவரும் தனித்துவமான தன்னிகரில்லாத தனிமனிதர்கள்.

இந்த அடிப்படையிலேயே நாம் எமது வெற்றிப் பாதையை செப்பனிட வேண்டியிருக்கிறது. வாழ்வின் வெற்றிக்கு மனமகிழ்வு, அமைதி, மன நிறைவு என்பனவே அடிப்படையாக அமைவதாக ஆய்வுகள் கூறுகின்றன. எனவே இந்த அடிப்படைகளை இலக்கு வைத்து நாம் நகரவேண்டிய தேவை இருக்கிறது. எமது வாழ்வின் தராதரம் எமது சிந்தனையின் தராதரத்தில் தங்கிநிற்கின்றது.

எமது முயற்சிகள் வெற்றிபெறலாம். பெற்றால் மகிழ்ச்சி. அவைவெற்றி பெறாவிட்டால் அவற்றிலிருந்து கற்றுக்கொள்ளலாம். தோல்வி போன்ற அந்த தோற்றப்பாடுகள் தான் உண்மையில் நாம் கற்றுக்கொள்வதற்கு கிடைத்த சந்தர்ப்பங்கள். அவற்றை வாழ்வின் தோல்வி என்று கருதி விடமுடியாது. வாழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் பின்னடைவுகள், தடங்கல்கள் மனிதனை பக்குவப்படுத்தும், நெறிப்படுத்தும் பலவற்றைகற்றுக் கொடுக்கும்...

2

நாம் எமது உண்மையான சிந்தனைகளுக்கும் நாம் செய்யும் தொழிலுக்கும் தலைவணங்குவோமாயின் பிறரிடம் மண்டியிடவேண்டியதேவை இருக்காது.ஆனால் எம் மனச்சாட்சிக்கு எதிராக சூழ்நிலைகளுக்கும் அழுத்தங்களுக்கும் மண்டியிடுவோமாக இருந்தால் ஒவ்வொருவரிடமும் மண்டியிட்டு வாழ வேண்டிய பரிதாப நிலை ஏற்படலாம். அப்படியாயின் நாம் யார் சொல்லைகேட்பது? எதன்படி நடப்பது?

பெரியவர்கள் சொல்லுவார்கள்

**மனிதன் சொல்ல இறைவன் கேட்பது திருவாசகம்**

**இறைவன் சொல்ல மனிதன் கேட்பது கீதை**

**மனிதன் சொல்ல மனிதன் கேட்பது குறள்**

**மகன் சொல்ல மகேசன் கேட்பது பிரணவம்**

**ஞானிகள் சொல்ல ஞானிகள் கேட்பது திருமந்திரம்**

**எம்மனம் சொல்வதை நாம் கேட்பது வாழ்க்கை.**

எமது மனச்சாட்சியை புறக்கணித்து நாம் செய்யும் செயல்கள் வெற்றிக்கு வழிவகுக்காது. நாம் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சாட்சி சொல்வதைக் கேட்டு வாழ்க்கையை நெறிப்படுத்தி ஆகவேண்டும். காலநடைமுறைகள் எம்மை ஏளனம் செய்யக்கூடும், புறக்கணிக்கக்கூடும், நோகடிக்கக்கூடும், மோதக்கூடும், இதனூடேநாம் தடம் மாறாது பயணித்து ஆக வேண்டும்.

எமக்குள்ளேயும் எம்மவருக்குள்ளேயும் யாராலும் கண்டுகொள்ள முடியாத பல திறமைகள் புதையுண்டு கிடக்கின்றன. அதனை அடையாளப்படுத்த முயற்சி எடுப்போம். அதைஅத்திபாரமாகக் கொண்டு முயற்சியை தொடருவோம். எமது இலக்கை நோக்கியநகர்வுகள் தான் முக்கிய மானவை. அதனை அடைய நாம் அதிக காலம் எடுப்பதுதோல்வி என்று அர்த்தப்படாது. வாழ்வில் ஒவ்வொருதடங்கலும் ஏற்படும் பொழுது எம் நிலையைமீளாய்வு செய்து நாம் விட்டதவறுகளை அறிந்து திருத்தி எமது வாழ்க்கை பயணத்தை தொடர்வது ஆரோக்கிய நகர்வாக அமையும்.

நாம் செய்யும் அல்லது செய்த தவறுகளை நாமே அடையாளப்படுத்திக் கொள்வது உண்மையிலே கடினமானது. ஆனால் அதுதான் எமது வெற்றிப் பாதையின் பிரதான படிக்கல்லாகவும் அமைகின்றது. பிறர் விடும் தவறுகளை இலகுவில் அடையாளப்படுத்திக் கொள்ளும் திறமை எம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. ஆனால் நாம் விடும் தவறுகளை நாமே அடையாளப்படுத்தி திருந்திக் கொள்ள முயலும் மனநிலை எம்மிடம் இல்லை.அதனை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டி இருக்கிறது. இந்த முயற்சி எம்மைவாழ்வின் வெற்றிக்கு இட்டுச்செல்லும் படிக்கற்களாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் சாம்பலாகிவிடவில்லை, கல்லறைக்குள் இல்லை, கடுமையாகநோய் வாய்ப்பட்டு கட்டிலில் கிடக்கவில்லை, அறிவு மங்கவில்லை, சிந்தனை ஓட்டங்கள் சிதறிப் போகவில்லை. இருந்தும் நாம் அடிக்கடிசோர்ந்துபோக காரணம் என்ன?

3

நாம் பலவற்றை கற்றுக் கொண்டே இருக்கின்றோம். கருவறையில் கருக்கொண்ட காலத்திலிருந்து நாம் கற்றுக்கொண்டே இருக்கின்றோம். வாழ்வில் பலவற்றை யாராலும் கற்பிக்க முடியாது. நாமாகத் தான் கற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறது. வாழ்வின் வெற்றிக்கானபாதையை எவ்வாறு செப்பனிடுவது என்பதையும் நாமாகத்தான் கற்றுக் கொள்ளவேண்டும்.

வாழ்வின் வெற்றிக்கான அடிப்படை விடயங்களாகிய மகிழ்வு, மனநிறைவு,ஆன்ம திருப்தி என்பன எதிலிருந்து எமக்கு கிடைக்கப் பெறுகின்றன? இவை பணத்திலோ ,வசதிகளினாலோ அல்லது பட்டங்களினாலோ, அந்தஸ்த்தினாலோ அல்லது பிறர் தருவதினாலோ கிடைக்கப்பெறுவது அல்ல. அவை எமது உள்ளுணர்விலிருந்து ஊற்றெடுத்துவரும் தன்னம்பிக்கை உணர்வில் தங்கியிருக்கிறது.

நாம் விழுந்து போகும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் சுமந்து நிற்கும் தன்னம்பிக்கை உணர்வு தான் எம்மை தாங்கிநிறுத்துகிறது. தன்னம்பிக்கை உணர்வும் அனுபவ முதிர்ச்சியும் எம் மனதை அமைதிப்படுத்தும் சோர்வை நீக்கும். எம் செயற்திறனையும் வல்லமையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருக்கும். இந்த அனுபவ முதிர்ச்சி வயதினால் அல்லது வயது போவதனால் ஏற்படுவது அல்ல.

அவை எமது வாழ்வில் தோல்விகள் போலவும் கஸ்டங்கள் போலவும் தோற்றப்படும் நிகழ்வுகளினாலேயே ஏற்படுகிறது. எமது அனுபவ முதிர்ச்சியை வளர்த்துக் கொள்வதற்கு உதவும் இந்த சம்பவங்களை எமது வாழ்வின் தோல்விகளாக கருதி விட முடியாது.

பின்னோக்கி இழுக்கப்பட்ட அம்புகள் தான் முன்னோக்கிப் பாயும். இது ஒரு இயக்கவியல் தத்துவம். பூமியின் உண்மையான இயற்கையான அழகான இடத்திற்குச் செல்ல வேண்டுமாயின் கடினமான பாதையினூடே சென்று ஆகவேண்டும். இது ஒரு இயற்கையின் தத்துவம். வாழ்வின் தத்துவமும் இதுவே.

என்றும் அன்றாட வாழ்வில் பொதிந்திருக்கும் நல்ல விடயங்களை அடையாளப் படுத்துவதில் கவனம் செலுத்துவோம். அவற்றை பாராட்டும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்வோம். இதன் பொழுது மகிழ்வும் நட்பும் தானாகப் பெருக்கெடுக்கும். அது பிறரை நல்லவற்றை செய்வதற்கு ஊக்கப்படுத்தும் .எதிலும் குற்றம் குறைகாணும் எண்ணம் எம்முள்ளே குடிகொண்டிருக்குமாயின் நாம் அமைதியாக வாழ முடியாது. மனதில் மகிழ்வு இருக்காது.அடிக்கடி கோபப்பட வேண்டிய சூழ் நிலைகள் ஏற்படும்.

ஒவ்வொரு தடவையும் கோபப்படும் பொழுது நாம் தோற்றுவிடுகிறோம். கோபத்தை ஏற்படுத்திய அந்தச் சூழ்நிலை எம்மை வெற்றி கொள்கிறது. கோபமான நிலையில் எமது புத்தி மங்கி சாதுரியம் குன்றி மனதாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலாலும் பிழையான தீர்மானங்கள் எடுக்கும் ஒரு பலவீனமான நிலைக்குத் தள்ளப்படுகிறோம்.

4

வாழ்க்கை உண்மையில் எளிமையானது. நாமே அதனை சிக்கல்கள் நிறைந்ததாக மாற்றிக்கொள்கிறோம். சிக்கல்களை ஏற்படுத்துவதற்கு எமது வாதிடும் குணாதிசயமும் கோபப்படும் தன்மையுமே பிரதானமான காரணமாக அமைகின்றது.

ஒரு விடயத்தை உணரக்கூடிய திறமைசாலிகள் என்று நாம் கருதுபவர்களுடன் மட்டும் வாதிடுவோம். எமது கருத்துக்களை வலியுறுத்திச் சொல்லுவோம். அவ்வாறானவர்கள் அல்ல என நாம் கருதுபவர்களுடன் வாதிட்டு நாமும் காயப்பட்டு மற்றவர்களையும் காயப்படுத்தும் முயற்சி எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்.

அமைதியாக இருப்பது ஆமோதிப்பது என்று அர்த்தப்படாது. பேசிப்பயன்தராது என்று நினைக்கின்ற பொழுது அல்லது உண்மை துலங்க காலம் கனிய வேண்டும் என்ற நிலை இருக்கும்பொழுது அமைதி சிலசமயம் மிகப்பொருத்தமான ஆயுதமாக இருக்கலாம்.

எமது இலக்கை நோக்கிய பாதையில் நின்று குரைக்கும் ஒவ்வொரு நாய்களுக்கும் கல்லெறிய முற்படுவோமாயின் எமது பயணம் முற்றுப் பெறமாட்டாது என்று அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதேபோலத்தான் வாழ்வில் ஏற்படும் இடையூறுகள் ஒவ்வொன்றுடனும் மோத முற்படுவோமாயின் எமது இலக்கை அடையமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஒருவன் பலம் பொருந்தியவன் போலத்தோற்றப்படலாம். ஆனால் காலச்சக்கரத்தின் கரங்கள் மிகமிகப் பலமானது. காலம் மாற, காலம்கனிய கனகாலம் ஆகாது.

விடயங்களை அமைதியாகவும் உணர்வு பூர்வமாகவும் அணுக பழகிக்கொள்ளும் பயிற்சி பயனுடையதாக அமையும். அந்தப்பயிற்சி அமைதியான முன்னோக்கிய பயணத்திற்கு உறுதுணையாக அமையும்.

எமது பயணத்தின்பொழுது எம்மீது கல்லெறிகள் விழலாம். அவற்றை எடுத்து திருப்பி எறிந்து அந்தக் கற்களை வீணடிப்பது புத்திசாதுரியம் ஆகாது. அந்தக் கற்களைக் கொண்டே எமது பாதையை செப்பனிட முயலுவோம். எமது பாதைக்கு உரம் சேர்ப்போம்.

எந்தப்பாதையில் பயணிப்பது என்ற தடுமாற்றம் தேவை அற்றது. மன உறுதியும் மனச்சாட்சியுடன் கூடிய உழைப்பும் இருக்குமாயின் நாம் பயணித் துக்கொண்டிருக்கும் பாதையே சரியான பாதையாக அமையும்.

எமது பயணத்தின் பொழுது காலம் பலவற்றை எமக்கு கற்றுத்தரும் நாம் எப்பொழுதும் கற்பதை நிறுத்தி விடமுடியாது. அதுவே எமது முன்னேற்றத்தின் உயிர் மூச்சு. இது புத்தகக் கல்வி என்று அர்த்தப்படாது. ஏமாற்றங்கள், இழப்புகள்,வறுமை,ஏன் பசிகூட எமக்கு பலவற்றை கற்றுத்தரும். எம்மை பக்குவப்படுத்தும்.

எமது இலக்கை அடைய அதிககாலம் எடுப்பது தோல்வி என்று ஆகிவிடாது. எமது உண்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கங்களை நோக்கி அமைதியாக எடுத்துவைக்கும் ஒவ்வொரு காற்தடங்களும் வெற்றிக்கான பதிவுகளே. வாழ்க்கை குறுகியது. இந்தக் குறுகிய வெளியில் பகைவளர்த்து நேரத்தை வீணடிப்பது வெற்றிக்கு இடையூறாக அமையும்.

5

எம்மிடம் இருந்தவற்றை நாம் இழந்து விடும் பொழுது வேதனைப்படுகிறோம். கோபப்படுகிறோம். மனவிரக்தி அடைந்து தோல்வி மனோநிலைக்கு ஆட்படுகிறோம். ஆனால் அவை எம்மிடம் இருந்த காலத்தில் அவற்றை எண்ணி மகிழ்ச்சி அடைந்திருக்கிறோமா என்று எண்ணிப்பார்ப்போமாக இருந்தால் அந்தக் காலத்திலே அவை சம்பந்தமாக நாம் அக்கறை அற்ற வர்களாக இருந்திருப்பது புலப்படும்.

எம்மிடம் இருப்பவற்றை எண்ணி மகிழ்ச்சி அடையத்தெரியாமல் அவற்றை இழக்கும்பொழுது மட்டும் வேதனைப்படும் மனநிலை விசித்திரமானது. எம்மிடம் இருப்பவற்றை எண்ணி மகிழ்ச்சியும் திருப்தியும் அடையும் மனநிலையை வளர்துக்கொள்ளும் பயிற்சி வெற்றிக்கு வித்திடும்.

எமது சிந்தனை இலக்கு மற்றவர்களிலும் பார்க்க நாம் சிறந்தவர்களாக மாறுவது எவ்வாறு என்று அமைந்திருப்பது ஆரோக்கியமானதாக அமையாது. இதற்குப்பதிலாக நாம் முன்பு இருந்ததிலும் பார்க்க சிறந்தவனாக வளர என்ன செய்யலாம் என்றவாறாக அமைந்திருப்பது ஆரோக்கியமான பாதையை எமக்கு காட்டிநிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனிடம் எதனை கேட்கவேண்டும்? மகிழ்வான, மனநிறைவான வாழ்வு எமக்கு கிடைக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்வதிலும் பார்க்க கஷ்டங்களையும், சவால்களையும் மனோதிடத்துடன் எதிர்கொள்ளும் வல்லமையை வேண்டிநிற்பது வாழ்வின் வெற்றிக்கு வழிசமைக்கும்.

வாழ்வில் பல நிரந்தரமான முடிவுகளை சில தற்காலிக காரணங்களுக்காக எடுத்துவிட்டு கஷ்டப்படுகின்றோம். உணர்ச்சி வசப்பட்டு இருக்கும் சந்தர்ப்பங்களில் முடிவெடுப்பதை தள்ளிப்போடுவது நல்லது. மனம் உணர்ச்சிவசப்பட்டு அங்கலாய்த்து இருக்கும்பொழுது நாம் எமது உண்மையான தன்னம்பிக்கையை இழந்துவிடுகின்றோம். தினமும் 18 மணிநேரம் தூங்கும் சிங்கங்கள் காட்டின் மன்னனானது எவ்வாறு? அதன் அலட்டிக்கொள்ளாத, அங்கலாய்க்காத மனப்போக்கும் தன்னம் பிக்கையுமே அதன் பலம்.

நாம் உணர்ச்சிவசப்பட்டதாலோ தவறாக வழிநடத்தப்பட்டதாலோ எடுத்த தவறான முடிவுகளை சரிசெய்துகொள்வது தோல்வி என்று அர்த்தப்படாது. சிலரை தவறாக புரிந்துகொண்டு பிரிந்துவிடுகிறோம்.வேறு சில தவறானவர்களை சரியாகப் புரிந்து கொள்ளாததால் அவர்களுடன் நெருங்கி அதன்காரணமாக நொந்து போகிறோம். இவை காலம் எமக்கு கற்றுக்கொடுக்கும் பாடங்கள். எமது துயர்களை நாமே எமது கைகளால் துடைத்து மற்றவர்களுக்கும் கைகொடுத்து எமது வெற்றிப்பாதையை செப்பனிடும் பணியை நாமே முன்னெடுத்து நம்பிக்கை ஒளியில் வெற்றி இலக்கைநோக்கி பயணித்து ஆகவேண்டி இருக் கிறது. எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு மங்கிவிடவில்லை. சிந்தனை ஓட்டங்கள் சிதறிவிடவில்லை. மனதினதும் உடலினதும் பலம் அற்றுப்போகவில்லை. அதற்காக சந்தோசப்படுவோம்.

06

வெற்றிப்பாதையில் வாழ்வை அமைதியாக நகர்த்திச் செல்வதற்கு அடிப்படையாக அமைவது மனமகிழ்வு, மனஅமைதி, மனநிறைவு என்பவையே என்று ஆய்வுகள் தெளிவுபடுத்தி நிற்கின்றன.

ஒருவரின் வாழ்க்கைத் தராதரமும் இவற்றைக்கொண்டே மதிப்பிடப்படுகின்றது. இந்த அடிப்படை அம்சங்கள் அற்றவாழ்வை ஒரு வெற்றிகரமான வாழ்வு என்று கொள்ளமுடியாது.

கோபமும் வெறுப்பும் பகை உணர்வும் ஒருவனின் ஆற்றலையும் ஆளுமையையும் வளர்ச்சியையும் மகிழ்ச்சியையும் பாதித்து நிற்கும் ஒரு பொது எதிரியாக வர்ணிக்கப்படுகிறது.

இந்தப் பொது எதிரி எம்மை பல தடவைகள் தோற்கடித்துவிடுகிறான். எமது சிந்தனையினதும் செயலினதும் பெரும்ப குதியை கோபத்திலும் பகை உணர்விலும் செலவிட்டு எமது பொன்னான நேரத்தை விரயமாக்குவது வெற்றிக்கு வழிவகுக்காது. உடல் ஆரோக்கியத்திற்கும் உகந்ததாக அமையாது.

இதற்கு மாறாக மனம் அன்புமயமாகி நிற்கும்பொழுது எமக்கு அளவுகடந்த ஆறுதலும் அமைதியும் பேராற்றலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துல்லியமாகச் செயற்படும் திறனும் ஏற்படுகிறது என்பது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

இறைவன் அன்புமயமானவன் என்று சொல்லுவார்கள். அதனாலேயே அவன் சர்வவல்லமையும் பொருந்தியவனாக விளங்குகின்றான்.

எம்மை வெறுப்பவர்களிடமும் அன்பு, பாராட்டும் மனவலிமையை வளர்த்துக் கொள்வது இலகுவான காரியமல்ல. அதேசமயம் அது முடியாத விடயமுமல்ல. எம்மை பிறர் வெறுப்பதற்கு காரணம் என்ன? நாம் இன்னொருவரை வெறுப்பதற்கு காரணம் என்ன? நாம் எதிரியாகக் கருதிக்கொள்பவர்களிடம் புதைந்து கிடக்கும் அன்பு ஊற்றை அடையாளப்படுத்திக் கொள்ள என்ன செய்யலாம்? என்பது போன்ற சிந்தனை ஓட்டங்கள் எம்மில் ஏற்படும் பொழுது பல சிக்கலான முடிச்சுகள் தானாக அவிழ்ந்து விடும்.

மனிதர்கள் அனைவரும் அடிப்படையில் அன்புமயமானவர்கள் தான்.அன்பு இல்லாத மனிதர்கள் யாரும் இருக்க முடியாது. எம்மை பலர் வெறுப்பதற்கும் நாம் பலரை வெறுப்பதற்கும் அடிப்படைக் காரணங்கள் வேறுபடலாம். அவற்றை கண்டறிய முயற்சிப்பது பல வெற்றிகளுக்கு வழி சமைக்கும்.

மற்றவர்களின் மன ஓட்டத்தை உணர்ந்து தவறுகளிருப்பின் மன்னித்து எமது தவறுகளையும் திருத்த முயன்று அனைவரிலும் அன்பு கொண்டு தடம் மாறாது பயணிக்கும் பயிற்சி பயனுடையதாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபம் , வெறுப்பு, பகை என்ற எதிரியை அன்பு என்ற அஸ்திரம் கொண்டு தாக்கி அழிக்கும் போரில் பலமுறை நாம் தோற்றுப் போகலாம். அந்தத் தோல்விகள் நிரந்தரமல்ல. எமது முயற்சிகளை சில சமயம் முடிக்க முடியாமல் போகலாம். ஆனால் முயற்சிக்க முடியாதவர்களாக நாம் இருந்து விட முடியாது.

எமது மகிழ்ச்சிகரமான வாழ்விற்கு நாமே பொறுப்பாளிகள். இவை எமக்கு பிறர்தர வருவதில்லை நாமே தான் உருவாக்கி கொள்ள வேண்டும்.

**Dr.சி.சிவன்சுதன்**
பொதுவைத்தியநிபுணர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிப்பான ஆசிரியரின் கை கட்டப்படும் போது

வருங்கால குற்றவாளியின் கை அவிழ்க்கப்படுகிறது

சமுதாயத்தின் நம்பிக்கை வெட்டப்படுகிறது.

-கில்லர்-

தவறுகள் அனுபவங்களைக் கொடுக்கும்

அனுபவங்கள் தவறுகளைக் குறைக்கும்.

"வளையாத தென்னை யொன்றில்லை

வலிதரா வாழ்க்கை யொன்றில்லை".

**பழமொழிகள்**

ஆற்றின் கீழ் இருக்கும் பாறாங்கல்லுக்கு பாதை மேல் இருக்கும் பாறாங்கல்லின் வருத்தம் தெரியாது.

-ஆபிரிக்கா-

பற்களுக்கு இடையில் மனிதன் மறைந்துள்ளான்

-அரேபியா-

நாக்கில் எலும்புகள் கிடையாது ஆனால் அது எலும்புகளை நொறுக்கவல்லது.

-அல்பேனியா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணின் மாதாவில்
20 - 06 - 1957

விண்ணின் கரங்களில்
15 - 11 - 2017

யாழ் மாவட்ட செயலகத்தின் சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒருங்கிணைப்பாளர்
திருமதி. விக்கினேஸ்வரன் கிருஷாந்தி அவர்களின் அன்பு தயார்

## அமரர்

## இராஜேஸ்வரி கமலநாதன்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

பூங்காற்று ஓய்ந்ததுவோ, பூமரம் சாய்ந்ததுவோ
இரண்டு சூரியன்களை ஏந்திய வட்டமுகம்
இடி விழுந்த நிலமாகி, இதழ்கள் மௌனம் சாதிக்க
சொல்ல மறந்த சோகத்தை, விழிகள் சொன்ன போது
இரண்டாய் பிளந்தது, எங்கள் இதயம்
பாலைவனமாகிப் போன, பாசக்குகைக்குள் - மீண்டும்
ஒரு ஆத்மலயிப்பில் - நீங்கள்
வந்து இணையும் இனிய வேளைக்காய்
இன்னும் சில மாத தவங்களோடு - எங்கள்
நண்பி கிருஷாந்திக்கு ஆறுதல் கூறும்
உள்ளங்களாய் காத்திருக்கும்

மத்திய அமைச்சின் சமூக சேவைகள் திணைக்கள
பணிப்பாளர் மற்றும் சமூக சேவை திணைக்கள
உத்தியோகத்தர்கள் (கொழும்பு)
யாழ் மாவட்ட சமூக சேவை -
அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

தோற்றம்
20
*
06
*
1952



மறைவு
15
*
11
*
2017

## திருமதி இராஜேஸ்வரி கமலநாதன்

(பபாக்கா)

திரு வேலும்மயிலும் இலட்சுமியம்மா அவர்களின் கனிஷ்ட புத்திரியும் திருவாளர் கமலநாதன் அவர்களின் அன்பு மனைவியுமான இராஜேஸ்வரி அவர்கள் காசிநாதர் அவர்களின் பேர்த்தியும் ஆவார். காசிநாதர் வித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவுறும் வேளையில் அன்னாரின் இழப்பு பெரும் துன்பத்திற்கு உரியது.

"நல்லதோர் வீணை செய்தே புழுதியில்
நலங்கெட எறிவதுண்டோ
நல்லாள் இராஜேஸ்வரியை
நம்மவர் மறப்பது எவ்வாறு?"

**அவரின் நினைவு என்றும் இதயத்தில் ஒளிரும்**

பாடசாலை சமூகம்
துன்னாலை காசிநாதர்
வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| | | |
|---|---|---|
| அன்னையின் மடியில் |  | ஆண்டவன் மடியில் |
| 1952 | | 2017 |
| 06 | | 11 |
| 20 | | 15 |

யாழ் மாவட்ட செயலக நிர்வாகக் கிளையில் சமூக சேவை உத்தியோகத்தராக
கடமையாற்றும் வி.கிருசாந்தி அவர்களின் அன்புத்தாயார்

அமரர்

## இராஜேஸ்வரி கமலநாதன்

அன்பு முகமும் தயவான பேச்சுக்களும்

மங்காத தெளிவுடன் அன்புகளை அரவணைக்கும்

அமைதியான சிந்தனையும் பொங்கு நினைவுகளுடன்

பூமியிலே நீர் வாழ்ந்தீர் காலனவன் கண்ணுற்று – உம்

கணக்கையும் முடித்துவிட்டான்

உமது பிரிவால் துயருற்று – உளம் கலங்குகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயரும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி

உதவி மாவட்ட செயலாளரும்,
நிர்வாகக்கிளை உத்தியோகத்தர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பூமி பந்தில் 20 - 06 - 1957



வான வீதியில் 15 - 11 - 2017

அமரர்

## இராஜேஸ்வரி கமலநாதன்

வளைந்தோடும் வாழ்வின்
நெகிழ்ந்தோடும் பயணந்தோறும்
நெகிழ்வு தரும் மாற்றங்களால்
மாற்றுத்திறனாளிகள் – எம்மை
மாற்றம் காண வைத்த – மாண்பு
மிக்க திருவாந்தியை பெற்று
புகழ் சேர்த்த அன்புதாயின்
பிரிவுத் துயருக்காய் எங்கள்
இதய மலர்களை தூவுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யாழ் மாவட்ட
மாற்றுத்திறனாளிகள் சுயதொழில் அமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூக்கள்

| | | |
|---|---|---|
| மண்ணில் |  | விண்ணில் |
| 1952 | | 2017 |
| 06 | | 11 |
| 20 | | 15 |

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல்துறையின் சிரேஸ்ர விரிவுரையாளராகக் கடமையாற்றும் T.விக்னேஸ்வரன் அவர்களின் அன்பு மாமியார்

## அமரர் இராஜேஸ்வரி கமலநாதன்

அன்பின் ஒளி விளக்கே! பண்பின் சிகரமே!
பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
நேசமாய் எம்முடன் பழகி
எல்லோருடனும் அன்பு மழை பொழிந்து
எல்லா நாளும் எம்முடன் சிரித்து பழகிய நீர்
சொல்லாமல் பேசாமல் சென்றீர்
உம்குடும்பத்தின் துடிப்போடு நாமும்
நொந்து நெருட துடிக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

அரசறிவியல்துறை பேராசிரியர்,
விரிவுரையாளர்கள்,
அரசறிவியல் ஒன்றியம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் பத்திரிகையில் வந்த கண்ணீர் அஞ்சலிகள்

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட செயலகத்தில் நிர்வாகப்
பிரிவில் கடமையாற்றும்
**திருமதி கிருஷாந்தி விக்கினேஸ்வரன்**
அவர்களின் அன்புத் தாயார்



### இராஜேஸ்வரி கமலநாதன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்ப
த்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்
துக்கொள்வதுடன் மாவட்டச் செயலகததின் சார்பில்
எமது ஆழ்ந்த அனுதாபங்களையும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

**யாழ்/ மாவட்ட செயலக நலன்புரிக் கழகம்**

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட செயலகத்திகன் சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகஸ்-
தர்களின் ஒருங்கிணைப்பாளர் **திருமதி விக்கினேஸ்வரன் கிருஷாந்தி**
அவர்களின் அன்புத்தாயார்.



### அமரர் இராஜேஸ்வரி கமலநாதன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்
களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**மத்திய அமைச்சின் சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் மற்றும் சமூக சேவை திணைக்கள உத்தியோகத்தர்கள் (கொழும்பு), யாழ். மாவட்ட சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலர் உடையார் அல்

வல்லிபுரம் கணபதிப்பிள்ளை
சின்னையா + சின்னாச்சிப்பிள்ளை

1. கணபதிப்பிள்ளை
2. இராசம்மா
3. அன்னம்மா
4. பீதாம்பரம்

சிதம்பரர்
+
மருதையினார்

மயில்வாகனம்

ஒருமகள் (m)
கதிர்காமர்
வல்லிபுரம்

1. ஏகாம்பரம் வேலுப்பிள்ளை
நாகம்மா
2. காசிநாதர் கனகசபாபதி
நமசிவாயம்
செல்லம்மா
இலட்சுமியம்மா
3. வேலுப்பிள்ளை (மலடன்)
4. சிதம்பரப்பிள்ளை (மலடன்)
5. பார்வதி மயில்வானம்
சி.சின்னத்தம்பி சுப்பிரமணியம்
சின்னப்பிள்ளை
மீனாட்சி
6. தெய்வானை நடராசா
வ.வேலுப்பிள்ளை வள்ளியம்மை
7. சிதம்பரம்

மருதையினார் (கி.விதானை)

சுவாமிநாதர்

சிற்றம்பலம் சகோதரிகள் ஐந்து பேர்

சின்னத்தங்கம்
சதாசிவம்

ஏகாம்பரம்

1. இரத்தினம்
2. இராசசுந்தரம்
3. செல்வநாயகம் (குலம்)
4. சின்னத்துரை
5. சிவலோகநாதன்
6. சிவமணி
கணபதிப்பிள்ளை

க
1.
1
2
3
4
2.
1
2

+

கமலநாதன்

பத்ம

மணி

திவாகரன்
+
நிரஞ்சனா

கிரிஷாந்தி
+
விக்னேஸ்வரன்
வேணுஷன்

+

இராசலட்சுமி
+
கதிரமலை

இராஜேஸ்வரி

காசிதாசன்
+
சாந்தினி
1. கஜேந்திரன்
2. ஜனனி

ஜெயலட்சுமி
+
முருகநாதன்
1. கிருஸ்ணி
2. அட்சுதன்

சிவசுப்பிரமணியம்
(ஆனந்தன்)
+
மதிவதனி
1. சிந்துஜன்
+
சௌமியா
2. சுஜேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

அல்லது வேலாயுத உடையார்

னை)

கந்தஉடையார்

குமாரவேலர்

கணபதியார்
1. சபாபதியார்
   1. சிவப்பிரகாசம்
   2. வேலுப்பிள்ளை
   3. விசுவலிங்கம்
   4. சகோதரிமாரும்
2. வல்லிபுரநாதர்
   1. இராமுப்பிள்ளை
      1. மகாதேவன்
      2. அமிர்தலிங்கம்
      3. பரமநாதன்
      4. சகோதரிமார்
   2. சகோதரிமாரும்

வல்லியார்

சண்முகம்
1. சின்னத்தம்பி
   1. சிவபாதம்
   2. செல்லம்மா
   3. யோகம்மா
2. வீரகத்தி
   1. நடராசா
   2. மகேஸ்வரி
   3. பொன்னம்மா
3. வல்லிபுரம்
4. கண்ணகை இராமலிங்கம்
5. பார்வதி சிவமலர்

கந்தர்

வல்லிபுரம்
1. வைரமுத்து
2. தாமோதரம்
3. கந்தசாமி
4. திருநாவுக்கரசு (இளையதம்பி)
5. பார்வதி
6. மீனாட்சி

வைரமுத்து
1. வேலுப்பிள்ளை
   1. கந்தசாமி
      1. தர்மராசா
      2. இராசபூபதி
      3. சிவமலர்
      4. சிவக்கொழுந்து
      5. கோபாலகிருஷ்ணர் முதலியோர்
   2. சுப்பிரமணியம் வேறு சகோதரரும்

காசிநாதர் (கி.வி)
1. வேலுப்பிள்ளை (கி.வி)
   1. சேதுப்பிள்ளை (கி.வி)
   2. திருஞானசம்பந்தர்
   3. சகோதரிமார்
2. விசுவநாதர்
   1. நல்லையா
   2. திருநாவுக்கரசு
   3. சகோதரிமார்
3. சின்னத்தம்பி
   1. காசிநாதர்
   2. அம்பலவாணர்
   3. சொக்கநாதர்
   4. சகோதரி

\+

பத்மநாதன் + மணிலாதேவி

ன் | வாகினி + விசாகன்

ா

கிரிதரன்

ர

செல்வநாதன் + சிவதர்சினி

அர்ஜீன் | அபிராமி

மாப்பாணர் + மீனாட்சி
1. வள்ளியம்மை
2. சின்னப்பிள்ளை
3. பொன்னையா

அருணாசலம் + இளையபிள்ளை
1. சின்னப்பா
2. நாகமுத்து
3. சின்னாச்சி
4. மீனாட்சி
5. பானுபதி
6. சின்னையா

வள்ளியம்மை + சின்னப்பா
1. வேலும்மயிலும்
2. நவரத்தினசாமி
3. கனகரட்ணம்
4. செல்வநாயகம்
5. லோகநாயகி
6. பத்மாவதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவில்கின்றோம்

அனைத்தும் அணையாத சோதியாய்
அன்பு, பண்பு, பாசம் என்ற
முக்குணங்களிலும் சிறந்து வாழ்ந்து
அருட்பெரும் சோதியில் சங்கமித்த
எமது குடும்பத்தலைவி

திருமதி கமலநாதன் இராஜேஸ்வரி அவர்கள் நோயுற்றிருந்த காலத்தில் யாழ் போதனா வைத்தியசாலையில் 4ம் இலக்க விடுதியில் வைத்திய நிபுணர் சிவன்சுதன் தலைமையில் சிகிச்சை அளித்து எம்மை நெறிப்படுத்திய அனைத்து வைத்தியர்களுக்கும் உதவி புரிந்த தாதியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

15.11.2017இல் இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டும் மற்றும் பின் வேறுவகையில் தேடி நாடிவந்து உதவி ஒத்தாசை புரிந்து எம்மை ஆறுதல் படுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் லண்டனில் வதியும் மகனின் வதிவிடத்திற்கு நேரில் சென்றும் தொலைபேசி மூலமும் இணையதள மூடாகவும் பத்திரிகை வாயிலாகவும் துண்டுபிரசுரமாகவும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன். இன்றைய அந்தியேட்டிக் கிரியையிலும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டவர் களுக்கும் எமது நன்றி என்றும் உரியது. மலரினை சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த சிவா ஓவ்செற் பிரின்ரேர்ஸ் நிறுவனத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

**மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோர்**

ஆசிரியர் சங்கம், யாழ் பல்கலைக்கழகம்.
அரசியல் ஒன்றியம், யாழ் பல்கலைக்கழகம்.
Hartleyiest Sports Clup, U.K.
யாழ் மாவட்டச் செயலக நலன்புரிக்கழகம்.
ADM Branch Kachcheri Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னின் குவையெனக்கு வேண்டியதில்லை
என்னைப் போற்றும் புகழெனக்கு வேண்டியதில்லை
மன்னன் முடியெனக்கு வேண்டியதில்லை அந்த
மாரன் அழகெனக்கு வேண்டியதில்லை

கன்னித் தமிழெனக்கு வேணுமேயடா – உ யிர்க்
கம்பன் கவியெனக்கு வேணுமேயடா
தின்னத் தமிழெனக்கு வேணுமேயடா
செத்துக் கிடக்கத் தமிழ் வேணுமேயடா

உண்ண உணவெனக்கு வேண்டியதில்லை – ஒரு
உற்றார் உறவினரும் வேண்டியதில்லை
மண்ணில் ஒருபிடியும் வேண்டியதில்லை இள
மாதர் இதழமுதும் வேண்டியதில்லை

சாகும் போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும் – என்றன்
சாம்பலும் தமிழ் மணத்து வேகவேண்டும்.

பண்டிதர் கணபதிப்பிள்ளை சச்சிதானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org